# பத்திரிக்கைச் செய்தி

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை பிரிவு அலுவலகத்தை அணுகி தான் கடந்த 07.01.2021 அன்று பத்திர பதிவு செய்ததாகவும், பதிவு செய்த பத்திரத்தினை கேட்டபோது திருமதி.செல்வசுந்தரி, சார்பதிவாளர், திருப்போரூர் அவர்கள் பத்திரத்தினை விடுவிக்க ரூ.10,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் எனவும், திரு.விமல்சன் பிரபு, அலுவலக உதவியாளர் தனக்கு ரூ.1,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் எனவும் கேட்பதாக புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 11.02.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.செல்வசுந்தரி, சார்பதிவாளர், திருப்போரூர், தான் கேட்ட லஞ்சபணம் ரூ.10,000/-தை அலுவலகத்தில் நின்று கொண்டிருந்த திரு.நவீன்குமார் என்ற தனியாரிடம் கொடுக்குமாறு கூறியதின்பேரில் புகார்தாரர் லஞ்சபணமான ரூ.10,000/-தை நவீன்குமாரிடம் கொடுக்க அதை அவர் பெற்றுக்கொண்டார். பக்கத்தில் நின்றிருந்த அலுவலக உதவியாளர் திரு.விமல்சன் பிரபு தான் ஏற்கனவே கேட்ட லஞ்சபணம் ரூ.1,000/- புகார்தாரரிடம் கேட்டு பெற்று, அவ்வலுகத்தில் பணியிலிருந்த திரு.செல்வம், TCS Data Entry ஊழியரிடம் கொடுத்தார். இதனைத்தொடர்ந்து திருமதி.செல்வசுந்தரி, சார்பதிவாளர், திருப்போரூர், திரு.விமல்சன் பிரபு, அலுவலக உதவியாளர், மற்றும் திரு.நவீன்குமார் என்ற தனியார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். திரு.செல்வம் TCS Data Entry ஊழியர் லஞ்சபணமான ரூ.1,000/-யை எடுத்துக்கொண்டு அலுவலகத்திலிருந்து தப்பிவிட்டார். திரு.செல்வத்தை தவிர மற்ற மூன்று குற்றவாளிகளும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டனர். திரு.செல்வம் இவ்வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார்.

**PRESS NOTE**

The complainant approached the Vigilance and Anti-Corruption Chennai City office, and gave complaint that Tr.Selvasundari, Joint Registrar, Sub-Register Office, Thiruporur is demanding bribe money of Rs.10,000/- for releasing a sale deed registered by the complainant on 07-01-21, and Tr. Vimalsan Prabu, the office assistant of Sub-Register Office also demanded Rs.1000/- to be given to him as bribe money for the same purpose and hence to take action against the government servants. In this connection a case was registered and a trap was organized today (11.02.21).

During trap proceedings inside the Sub-Register Office, Thiruporur, Tr.Selvasundari, Joint Registrar (A1),reiterated her earlier bribe demand and instructed the complainant to handover the bribe amount Rs.10,000/- to one private person Tr.Naveen Kumar, who was standing before A1. Accordingly the complainant gave the bribe money to Tr.Naveen Kumar and he received the bribe money. Tr. Vimalsan Prabu, the office assistant of Sub-Register Office (A1) also reiterated his earlier bribe demand of Rs.1000/- and received it from the complainant and gave it to one Selvam, TCS data entry staff working in the Sub-Register Office, Thiruporur.

The accused A1, A2 and the private person Tr.Naveen Kumar have been arrested and bribe money of Rs.10,000/- recovered. Tr.Selvam, TCS data entry staff had left the office with the bribe money of Rs.1000/- before the vigilance officials could reach him. He has also been added as accused.